[13th September 1958

இருக்கலாம். அதற்குப் பிற்பாடு அந்தச் கூரை வீடுகளை ரிபேர் செய்வதற்கு ரூ. 30 வீதம் கொடுக்கப்படும். அதோடு அவர்களுக்கு கைத்தறித் துணியும் உடைக்காக கொடுக்கப்படும். மற்றப்படி அவர்களுக்கு நல்ல விதத்திலே வீடு கட்டிக்கொடுத்து அவர்களை அமரவைப்பது எனது தோழர் மந்திரி அவர்களுடைய பொறுப்பு.

Sri K. VINAYAKAM : Sir, the object of maintaining Fire Stations is to quench fire whenever it is likely to break out. Were not the services of the personnel of the Fire Stations indented upon to quench this fire and if so, why was the damage so heavy due to that fire? As the presence of huts with thatched leaves is the cause of the fire, will the Government take care now to instruct the authorities concerned once again to give cement sheets so that they can be used instead of thatched leaves?

The Hon. Sri M. A. MANICKAVELU : No doubt, it is a good idea, but the cost of it is rather prohibitive in the state of affairs existing in our country. That is the difficulty.

Another thing that can be done is not to allow them to build huts very close to each other. If there is some spacing between them, to some extent it will give relief.

As for the fire-engine coming late, there are cases where they come on the spot and put out the fire quite in time and there are also cases where they are not in a position to do so because they are called upon late or the fire is very severe.

Sri A. R. MARIMUTHU : இம்மாதிரி தீ விபத்துக்கள் போன்றவைகள் ஏற்படும்போது தங்களிடத்திலே இருக்கும் சொத்து அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு வேறு எந்த விதமான கதியும் இல்லாமல் இருக்கும்போது, விலைவாசி ஏற்றத்தின் காரணமாக சிறு குடிசை போட்டுக்கொள்வதற்குக்கூட அதிகப்படியான செலவு ஆகிறது. ஆகவே, முப்பது ரூபாய் கொடுப்பது என்ற விதியைத் திருத்தி, அதிகத் தொகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரி விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொஞ்சம் கைதூக்கிக் கொடுக்கவேண்டும் என்ற அந்த முறையிலேதான் செய்யப்படுகிறது. இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்கலாம். அதற்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், அது பண வசதியைப் பொருத்து இருக்கிறது.

Mr. SPEAKER : 177, 178, 179, 228-எ ஆகிய இந் நான்கு கேள்விகளும் மழையைப் பற்றியவை. ஆகையால், இவை நான்கையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

Artificial rain

* 177 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to invite foreign experts for consultation in connexion with artificial rain-making?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no proposal to invite foreign experts for consultation in connexion with artificial rain-making in this State.